# செந்தூலிலுள்ள சட்டவிரோதக் குடியிருப்பில்

# 123 அந்நியர்கள் மீது சோதனை

நமது நிருபர்

கோலாலம்பூர், மே 29-

செந்தூல் சுற்றுப் பகுதியிலுள்ள ஒரு சட்டவிரோதக் குடியிருப்பில் நேற்று பின்னிரவு 1.00 மணிக்கு 123 அந்நியர்கள் மீது மலேசியக் குடிநுழைவுத் துறை சோதனை நடவடிக்கை மேற்கொண்டதாக அதன் தலைமை இயக்குநர் டத்தோ ருஸ்லின் ஜுசோ தெரிவித்தார்.

இதில் மியன்மாரியர்கள் 95 பேர், இந்தியர்கள் 21, இந்தோனேசியர்கள் 7 பேர் சோதனையிடப்பட்டனர்.

இந்த சட்டவிரோதக் குடியிருப்பு தொடர்பில் கிடைத்த புகார்களின்படி மேற்கொண்ட உளவு நடவடிக்கையில் இது 4 ஆண்டுகளுக்கு முன்பே இக்குடியிருப்பில் மின்சார வசதி செய்து கொடுத்தது கண்டுபிடிக்கப்பட்டது.

மின்சார வசதியை ஏற்படுத்திக் கொடுத்த மலேசியரிடம் வாடகைக்குக் குடியிருக்கும் இவர்கள் அவருக்கு மாதந்தோறும் வெ.400 வாடகைத் தொகையாகச் செலுத்தி வந்திருக்கின்றனர்.

இந்த சட்டவிரோதக் குடியிருப்பில் மளிகைக்கடையும் உள்ளது. இங்குள்ள பெரும்பாலான அந்நியர்கள் சுற்றுப் பகுதிகளில் வேலை செய்வதோடு வணிகத்திலும் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்கள் அனைவரும் எந்த சட்டப்பூர்வ பயண ஆவணத்தையும் கொண்டிருக்காமல் நீண்ட காலமாக இங்கு தங்கியிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.







சோதனை நடவடிக்கை மேற்கொண்ட போது பிடிபட்டு விடாமல் இருக்க ஒருசிலர் கூரையின் மீது ஏறிக் கொண்டனர்; வீட்டில் ஒளிந்து கொண்டனர்; வீட்டைப் பூட்டிக் கொண்டனர்.

இச்சோதனை நடவடிக்கையில் மலேசியக் குடிநுழைவுத் துறை, பொது நடவடிக்கைக் குழு, தேசியப் பதிவிலாகா, பொதுத் தற்காப்புத் துறை, கோலாலம்பூர் மாநகர் மன்றம் ஆகியவை இணைந்து செயல்பட்டன. இதில் அந்த அந்நியர்கள் அனைவரும் 1959/63 குடிநுழைவு சட்டத்தின் கீழ் விசாரணை செய்யப்படுவர் என்று செய்தியாளர்களிடம் டத்தோ ருஸ்லின் ஜுசோ குறிப்பிட்டார்.